


ஆளுநர் மாளிகையில் நேற்று முன்தினம் (29.9.2024) – ஆளுநர் ஆர்.என்.ரவி அவர்களுடன், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான அமைச்சரவை எடுத்துக் கொண்ட குழு புகைப்படம்!

## துணை முதலமைச்சருக்கும் – புதிய அமைச்சர்களுக்கும் வாழ்த்துகள்! மிகுந்த நம்பிக்கையோடு நமக்கு வாக்களித்துள்ள

# மக்களின் நம்பிக்கையைக் காக்கும் வகையில் நாம் அனைவரும் செயல்பட வேண்டும்!

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிக்கை!

**சென்னை, அக். 1 -**

**தமிழ்நாட்டின் துணை முதல்வராக உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பொறுப்பேற்றுள்ளதை யொட்டியும், புதிதாக நான்கு அமைச்சர்கள் பதவியேற்பு உறுதிமொழி எடுத்துக் கொண்டதை அடுத்தும், நேற்று முன்தினம் (29.9.2024) மாலை, முதல்வர் - கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் விடுத்த அறிக்கையில், "துணை முதலமைச்சருக்கும் - புதிய அமைச்சர்களுக்கும் வாழ்த்துகள்!" என்றும் - "மிகுந்த நம்பிக்கையோடு நமக்கு வாக்களித்துள்ள மக்களின் நம்பிக்கையைக் காக்கும் வகையில் நாம் அனைவரும் செயல்பட வேண்டும்" என்றும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.**

முதல்வர் - கழகத் தலைவர் அவர்களின் அறிக்கை வருமாறு:-

பவள விழாவைக் கொண்டாடும் திராவிட முன்னேற்றக் கழகம், தமிழ்நாட்டை ஆறாவது முறையாக ஆட்சி செய்து வருகிறது. கழகத்தின் கரங்களில் தமிழ்நாட்டு மக்கள் ஆட்சி அதிகாரத்தை வழங்கிய போதெல்லாம் நிறைவேற்றிக் காட்டிய தொலைநோக்குத் திட்டங்களின் மூலமாக நாம் அடைந்த வளர்ச்சிதான், இன்று நாம் காணும் நவீன தமிழ்நாடு!

**அனைத்து வளர்ச்சிக் குறியீடுகளிலும் தமிழ்நாடு சிறந்து விளங்குகிறது!**

இன்றைய தினம் இந்தியாவிலேயே இரண்டாவது பெரிய பொருளாதாரம் கொண்ட மாநிலமாகத் தமிழ்நாடு திகழ்ந்து வருகிறது. அனைத்துத் துறைகளிலும் முன்னேற்றம் கண்டுள்ளோம். அந்த வளர்ச்சியின் மூலமாக மக்கள் பயனடைந்து வருவதையும் நேரடியாகப் பார்த்து வருகிறோம். மாநில வளர்ச்சியின் குறியீடுகளாக உள்ள அனைத்திலும் தமிழ்நாடு இன்று சிறந்து விளங்குகிறது. இதை இன்னும் சிறப்பானதாக ஆக்கவே திராவிட மாடல் ஆட்சியானது நாள்தோறும் நல்ல பல திட்டங்களைத் தீட்டி வருகிறது.

அனைத்துத் துறை வளர்ச்சி அனைத்து மாவட்ட வளர்ச்சி அனைத்துச் சமூக வளர்ச்சி ஆகியவற்றின் மூலமாக 'எல்லார்க்கும் எல்லாம்' என்ற இலக்குடன் நமது அரசு முனைப்போடு செயல்பட்டு வருகிறது. சமூகநீதிச் சிந்தனையோடு, தமிழ்நாட்டின் வளர்ச்சியை ஜனநாயகப்படுத்தி விளிம்புநிலை மக்கள், ஏழை எளியவர்களின் வாழ்க்கையில் ஏற்றத்தை உருவாக்கி இருக்கிறோம்!

**மூன்றாண்டு கால வளர்ச்சிக்கு அமைச்சர் பெருமக்களின் பங்களிப்பு!**

இவை ஏதோ தனிப்பட்ட எனது சாதனை அல்ல என்பதைச் சட்டமன்றத்திலும், மக்கள் மன்றத்திலும் சொல்லி இருக்கிறேன். அரசும், பொறுப்பும், தலைமையும், முதலமைச்சரின் செயல்களும் கூட்டுப் பொறுப்பு என்பதை உணர்ந்தவன் நான். அதன்படியே செயல்படுபவன் நான். திராவிட இயக்கத்தின் அடிப்படைக் கொள்கை உணர்வு நம்மை வழிநடத்திக் கொண்டிருக்கிறது.

இம்மூன்றாண்டு கால வளர்ச்சிக்குத் தமிழ்நாடு அமைச்சர் பெருமக்கள் அனைவரும் பங்களித்து இருக்கிறார்கள்.

இதன் இன்னொரு கட்டமாகவே தமிழ்நாடு அரசின் துணை முதலமைச்சராக இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி நியமிக்கப் பட்டுள்ளார். முதலமைச்சரான எனக்குத் துணையாக அல்ல; இந்த நாட்டு மக்களுக்குத் துணையாக அவர் இருக்கப் போகிறார். தனக்கு வழங்கப்பட்ட விளையாட்டுத் துறையின் மூலமாக இந்தியாவின் கவனத்தை மட்டுமல்ல, உலகின் கவனத்தை ஈர்த்தவர் உதயநிதி. விளையாட்டுத் துறை, மிகக் குறுகிய காலத்தில் வீறுகொண்டு எழுந்துள்ளது. நாள்தோறும் விளையாட்டு வீரர்கள் பெற்றுவரும் பரிசுகள், ஒலிம்பிக்கை நோக்கிய நம் மாநிலத்தின் பயணமாக அமைந்துள்ளது.

அதேபோல், தமிழ்நாடு அரசின் சிறப்புத் திட்டங்களை மிக உன்னிப்பாக ஆய்வு செய்து வருகிறார். அதன் செயல்பாடுகளை ஒவ்வொரு நாளும் கண்காணித்து அதன் உண்மையான நோக்கத்தை நிறைவேற்றிக் காட்டி வருகிறார் அமைச்சர் உதயநிதி.



**முன்னிலும் கூடுதலாக உழைப்பை உதயநிதி ஸ்டாலின் செலுத்திட வேண்டும்!**

**கழகத்தின் இளைஞரணிச் செயலாளராக இருந்து இளைஞர்களை ஈர்த்தும், அவர்களை திராவிடக் கொள்கை கொண்டோராகக் கூர் தீட்டியும் வருகிறார். அவரது செயல்பாடுகள் கழகத்தின் வளர்ச்சிக்கும், ஆட்சித் திறன் மூலமாகத் தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கும் இன்னும் கூடுதலாக உழைக்க வேண்டும் என்பதை மனதில் வைத்தே, துணை முதலமைச்சர் பொறுப்பு அவருக்கு வழங்கப்பட்டுள்ளது. முன்னிலும் கூடுதலான உழைப்பை அவர் செலுத்திட வேண்டும்.**

இளைஞரணிக் காலம்தொட்டு என்னோடு களப்பணியாற்றிய வர்களான சேலம் ராஜேந்திரன் அவர்களும் ஆவடி நாசர் அவர்களும், மாணவப் பருவம் முதலே திராவிடக் கொள்கையில் ஊறி அடிமட்டத் தொண்டராகக் கழகத்துக்கு உழைத்த தம்பி கோவி செழியன் அவர்களும் அமைச்சர் பொறுப்பேற்கிறார்கள்.

**திராவிட முன்னேற்றக் கழகத்தின் கோடிக்கணக்கான தொண்டர்களின் உள்ளக் கிடக்கையையும் உணர்வையும் புரிந்துகொண்டு, அனைத்துத் தரப்பு தமிழ்ப் பெருங்குடி மக்களின் எதிர்பார்ப்புகளை அறிந்து அவர்கள் மனநிறைவு அடையும் வகையில் செயலாற்றிட வேண்டுமென்று விழைகிறேன்.**

**15 மாத சிறையை ஏற்ற செந்தில் பாலாஜியின் தியாகம்!**

செந்தில் பாலாஜி அவர்களுக்கு மீண்டும் அமைச்சர் பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது. அவரது தியாகத்தை நான் வாழ்த்தியதைச் சிலரால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. அவரை வைத்து கழகத்துக்கு எதிரான சதிச்செயல்களைச் செய்ய ஒரு கூட்டம் திட்டமிட்டது. அதற்கு விலையாக 15 மாத சிறையை ஏற்றதுதான் தியாகம். தன்னால் இயக்கத்துக்குக் களங்கம் வரக்கூடாது என்று நினைப்பவர்களால்தான் இந்த இயக்கம் இயங்குகிறது.

**தமிழ்நாடு அரசின் துணை முதலமைச்சராக இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி நியமிக்கப் பட்டுள்ளார். முதலமைச்சரான எனக்குத் துணையாக அல்ல; இந்த நாட்டு மக்களுக்குத் துணையாக அவர் இருக்கப் போகிறார். தனக்கு வழங்கப்பட்ட விளையாட்டுத் துறையின் மூலமாக இந்தியாவின் கவனத்தை மட்டுமல்ல, உலகின் கவனத்தை ஈர்த்தவர் உதயநிதி. விளையாட்டுத் துறை, மிகக் குறுகிய காலத்தில் வீறுகொண்டு எழுந்துள்ளது. நாள்தோறும் விளையாட்டு வீரர்கள் பெற்றுவரும் பரிசுகள், ஒலிம்பிக்கை நோக்கிய நம் மாநிலத்தின் பயணமாக அமைந்துள்ளது. அதேபோல், தமிழ்நாடு அரசின் சிறப்புத் திட்டங்களை மிக உன்னிப்பாக ஆய்வு செய்து வருகிறார். அதன் செயல்பாடுகளை ஒவ்வொரு நாளும் கண்காணித்து அதன் உண்மையான நோக்கத்தை நிறைவேற்றிக் காட்டி வருகிறார் அமைச்சர் உதயநிதி.**

புதிய அமைச்சர்களுக்கு எனது நெஞ்சார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

உங்களது கடந்த கால உழைப்பையும், நிகழ்காலத் திறனையும் மனதில் வைத்து இப்பொறுப்புகளை உங்களிடம் ஒப்படைத்துள்ளேன். தங்களுக்கு வழங்கப்பட்ட துறையை எந்த விமர்சனங்களுக்கும் ஆளாகாமல் கவனித்து, அத்துறையின் மூலமாக மாநிலத்தை வளப்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

குறிப்பிட்ட சில அமைச்சர்களுக்கு அவர்கள் வகிக்கும் துறையில் மாறுதல்கள் செய்து தரப்பட்டுள்ளன. புதிய துறையைக் கவனத்துடன் கவனித்துப் பணியாற்றுமாறு அவர்களையும் நான் கேட்டுக் கொள்கிறேன்.

**இந்தியாவிற்கே முன் மாதிரி ஆட்சியாக அமைய உழைப்போம்!**

முன்பே சொன்னது போல, அரசு என்பது கூட்டுப் பொறுப்பு ஆகும். அமைச்சர்களின் கூட்டுச் சேர்க்தாகைதான் முதலமைச்சராகிய நான். அமைச்சர்கள் அனைவர் மீதும் நான் எந்த அளவு நம்பிக்கை வைத்துள்ளேனோ, அதை விட அதிகமான நம்பிக்கையை நாட்டு மக்கள் வைத்துள்ளார்கள். மிகுந்த நம்பிக்கையோடு நமக்கு வாக்களித்துள்ள மக்களின் நம்பிக்கையைக் காக்கும் வகையில் நாம் அனைவரும் செயல்பட வேண்டும்.

'திராவிட மாடல்' ஆட்சியானது இந்தியாவுக்கே முன்மாதிரி ஆட்சியாக அமைய நாம் உழைப்போம்! அறிவிக்கப்படும் ஒவ்வொரு திட்டமும், கடைக்கோடி மனிதரையும் சென்று சேர்கிறதா என்பதைக் கவனிப்போம்! இனி எந்நாளும் தமிழ்நாட்டை திராவிட முன்னேற்றக் கழகம் தான் ஆளும் என்ற நிலையை உருவாக்க உறுதியேற்போம்!

**நாளும், மக்கள் - தொண்டாற்றிடுவோம்!**

திராவிட முன்னேற்றக் கழகம் ஆயிரம் காலத்துப் பயிர். தமிழ் மண்ணின் தனித்தன்மையை நிலைநாட்ட, நாளும் மக்கள் தொண்டு ஆற்றிடுவோம்!

இவ்வாறு - முதல்வர் - கழகத் தலைவர் அவர்கள் தமது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

## அரசு தலைமைக் கொறடாவாக குன்னூர் கா.இராமச்சந்திரன் நியமனம்!

### தமிழ்நாடு சட்டப்பேரவை முதன்மைச் செயலாளர் அறிவிப்பு!



சென்னை, அக். 1–

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் குன்னூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் கா.ராமச்சந்திரன் அரசுத் தலைமைக் கொறடாவாக நியமிக்கப்பட்டுள்ளார் என தமிழ்நாடு சட்டப் பேரவையின் முதன்மைச் செயலாளர் முனைவர் கி.சீனிவாசன் தெரி வித்துள்ளார்.

### உவத்தல் காய்தலின்றி – பொதுநிலை போற்றி

## அன்பும் நேசமும் காட்டி ஆட்சி செய்திடுவீர்!

### துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலினுக்கு – தருமபுரம் ஆதீனம் வாழ்த்து!

*மயிலாடுதுறை, அக். 1 -*

*துணை முதலமைச்சர் பொறுப்பு ஏற்றுள்ள உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு தருமபுரம் ஆதீனம் வாழ்த்துத் தெரிவித்துச் செய்தி வெளியிட்டுள்ளார்.*

*அதில் அவர், "உவத்தல் காய்தலின்றி பொதுநிலை போற்றி அன்பும் நேசமும் காட்டி ஆட்சி செய்திடுவீர்!" என்று குறிப்பிட்டுள்ளார்.*



*தருமபுரம் ஆதீன கர்த்தர் ஸ்ரீலஸ்ரீ கயிலை மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில் கூறியிருப்ப தாவது:-*

*உதயநிதி ஸ்டாலின் அவர்கட்கு வாழ்த்துக்கள். தாங்கள் துணை முதலமைச்சராகப் பொறுப்பேற்றதற்கு பாராட்டுக்கள்.*

*தாங்கள் தங்கள் தந்தையின் வழிநின்று நல்லதொரு ஆட்சி ஆளுமை செய்திட மக்களின் தேவையை உணர்ந்து உவத்தல் காய்தலின்றி பொதுநிலை போற்றி அன்பும் நேசமும் காட்டி ஆட்சி செய்திட செந்தமிழ்ச் சொக்கன் திருவருளை சிந்திக்கின்றோம்.*

*இவ்வாறு அந்த வாழ்த்துச் செய்தியில் தருமபுரம் ஆதீனம் கூறியுள்ளார்.*

## நடிகர் சத்யராஜ் - துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலினுக்கு வாழ்த்து!



சென்னை, அக்.1–

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாடு அரசின் துணை முதலமைச்சர் பொறுப்பை நேற்று முன் தினம் வழங்கினார்.

புதிய துணை முதலமைச்சராகப் பதவி உயர்வு பெற்ற உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு, அமைச்சர் பெருமக்கள், சட்டமன்றம் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள், கழக நிர்வாகிகள், அரசு அதிகாரிகள் உள்பட பலர் நேரிலும் தொலைபேசி வாயிலாகவும் வாழ்த்துத் தெரிவித்து வருகின்றனர்.

இந்த நிலையில் நடிகர் சத்யராஜ், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலினுக்கு அலைபேசி மூலம் வாழ்த்துத் தெரிவித்தார்.